# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள் 15.07.2026

## முன்னிலை

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)**

**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.SA 6982/SCIC/2024**

திரு.ரா.தனசேகரன் - மேல்முறையீட்டாளர்
எண்.1/65, எம்பார் நாயுடு 2வது தெரு
வில்லிவாக்கம். சென்னை - 600 049.
கைப்பேசி.9790181013

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் / - பொது அதிகார அமைப்பு
மண்டல நல அலுவலர்
மண்டலம் - 8
பெருநகர சென்னை மாநகராட்சி
Door No. 36B, 2nd Cross Street, Pulla Avenue,
Shenoy Nagar, Chennai - 600030

## ஆணை

| | | |
|---|---|---|
| 1. | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **29.12.2023** |
| 2. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 08.03.2024 |
| 3. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 25.05.2024 |
| 4. | மனுதாரரின் ஆட்சேபனை மனு | 19.02.2025 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 29/12/2023 நாளிட்ட மனுவை பொதுத் தகவல் அலுவலர், சென்னை மாநகராட்சி 8வது மண்டலம், புல்லா அவின்யூ, செனாய் நகர், சென்னை-30 அவர்களுக்கு அனுப்பி, அதில் "சென்னை மாநகராட்சியில் மண்டலம் 8-ல் உள்ள வார்டு 94-ல் கடந்த 2022ஸ்ரீ2023-ல் கையாளப்பட்ட சுகாதாரப் பணிகள் தொடர்பான பதிவேட்டினையும், அதற்காக செய்யப்பட்ட செலவு தொகைகளின் பில், வவுச்சர் பதிவேடுகள் மற்றும் அது தொடர்பான அனைத்து ஆவணங்களையும் தகவல் பெறும் உரிமைச் சட்டம்,

2005 பிரிவு 2(J)-ன் கீழ் நேரடியாக பார்வையிட அனுமதி வழங்கவும்" என்பன போன்று 2 (இரண்டு) இனங்களில் தகவல்களை/அனுமதி அளிக்கக் கோரியுள்ளார்.

2. இன்றைய (15/07/2026) ஆணையத்தின் விசாரணையின் போது மனுதாரர் திரு.ரா.தனசேகரன் அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில், தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012 விதி 8(2)-ன்படி அங்கீகாரம் பெற்ற பிரதிநிதியாக, திரு.T.இராமசேஷகிரி, கண்காணிப்பாளர், சுகாதாரப் பிரிவு, மண்டலம்-8, சென்னை பெருநகர மாநகராட்சி, சென்னை அவர்கள் நேரில் ஆஜராகி, பொதுத் தகவல் அலுவலர்/ மண்டல சுகாதார அலுவலர், மண்டலம்-8, சென்னை பெருநகர மாநகராட்சி, சென்னை அலுவலக ஆய்வு பணி காரணமாக ஆணையத்தின் விசாரணையில் கலந்து கொள்ள இயலவில்லை எனக் குறிப்பிட்ட கடிதத்தினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். இக்காரணத்தினை ஆணையம் ஏற்கவில்லை. இனி வருங்காலங்களில், பொதுத் தகவல் அலுவலர்/ மண்டல சுகாதார அலுவலர், மண்டலம்-8, சென்னை பெருநகர மாநகராட்சி, சென்னை அவர்கள் ஆணையத்தின் விசாரணைக்கு முன்னுரிமை அளித்து தவறாது ஆஜராக வேண்டுமென்று அறிவுறுத்தப்படுகிறது. பொதுத் தகவல் அலுவலரின் பிரதிநிதி தெரிவிக்கையில், ஏற்கனவே மனுதாரருக்கு பதில் அளித்துள்ளதாகத் தெரிவித்து அதில் மனுதாரர் தனிப்பட்ட நபர் என்ற காரணத்தினால், மனுதாரர் கோரியவாறான 2(J) ஆய்விற்கான அனுமதி அளிக்க இயலாது எனக் குறிப்பிட்டுள்ளதாகத் தெரிவித்தார். பொதுத் தகவல் அலுவலர் அளித்த பதிலுக்கு தனது ஆட்சேபனையினை மனுதாரர் தெரிவித்தார். **ஆணையத்தின் விசாரணையின் வாயிலாக, மனுதாரர், மண்டலம்-8 பகுதியில் வசிப்பவர் அல்ல என்றும் வழக்கறிஞராக பணியாற்றிக் கொண்டிருப்பதாகவும் தெரிய வருகிறது. எனினும், பொதுத் தகவல் அலுவலர், முன்பு மனுதாரரின் கோரிக்கையினை நிராகரித்திருந்தாலும், விசாரணையின் போது ஆஜராகியிருந்த பொதுத் தகவல் அலுவலரின் பிரதிநிதி, மனுதாரரின் சட்டப்பிரிவு 6(1)-ன் கீழான மனு தொடர்பான அனைத்து ஆவணங்களையும் மனுதாரர் பார்வையிட ஒப்புக் கொண்டார். எனவே, மனுதாரர் 22/07/2026 அன்று காலை 11.00 மணிக்கு பொதுத் தகவல் அலுவலரின் அலுவலகத்திற்கு செல்ல வேண்டுமென்றும், பொதுத் தகவல் அலுவலர் / மண்டல சுகாதார அலுவலர், மண்டலம்-8, சென்னை பெருநகர மாநகராட்சி, சென்னை அவர்கள், மனுதாரரின் சட்டப்பிரிவு 6(1)-ல் கோரியுள்ள தகவல் தொடர்பான பதிவேடுகள் மற்றும் அது தொடர்பான அனைத்து ஆவணங்களையும் மனுதாரர் பார்வையிடுவதற்கு தயார் நிலையில் வைத்திருந்து, அதனை மனுதாரர் பார்வையிட்டு ஆய்வு செய்ய உதவிட வேண்டுமென்றும், அதன் பின்னர் மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 2(J) -ன் கீழ் ஆய்வு செய்தது குறித்த நிறைவேற்றுகை அறிக்கையினை, ஆய்வு செய்த நாளிலிருந்து ஒரு வார காலத்திற்குள் ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA 6982/SCIC/2024</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
மண்டல நல அலுவலர்
மண்டலம் - 8
பெருநகர சென்னை மாநகராட்சி
Door No. 36B, 2nd Cross Street,
Pulla Avenue,
Shenoy Nagar, Chennai - 600030

**<u>மேல்முறையீட்டாளர்</u>**

திரு.ரா.தனசேகரன்
எண்.1/65, எம்பார் நாயுடு 2வது தெரு
வில்லிவாக்கம். சென்னை - 600 049.
கைப்பேசி.9790181013

RG/Sr.PC